

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2050 | மே 02, 2019 | புரட்சி 18 | முழக்கம் 16 | விலை: ரூ.3.00

# உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதிக்கு எதிரான சதி

உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய்மீது பாலியல் புகார் கொடுத்த பெண்மணி யார் என்றால், நீதிபதிகள் அளித்த தீர்ப்பையே தலைகீழாக மாற்றி தொழில் அதிபர்களால் இலாபம் அடைந்தவர் என்ற திடுக்கிடும் தகவல் வெளிவந்துள்ளது.

தலைமை நீதிபதி மீது புகார் கூறிய பெண் மீது பல மோசடி வழக்குகள் உள்ளன. அதில் நீதிமன்றத் தீர்ப்புகளை ‘டைப்’ செய்யும் பணியில் இருந்த போது, நீதிபதிகள் வழங்கிய தீர்ப்பில் “மோசம், மிக மோசம்” என்று கூறிய வரிகளை அப்படியே “நல்லது மிகவும் நல்லது” என்று தலைகீழாக மாற்றம் செய்து பதிவு செய்வார். முக்கியமாக வங்கிக் கடன் தொடர்பாக பெரிய நிறுவனத்தினர் மீது வரும் தீர்ப்புகளில் முன்கூட்டியே இவரிடம் நிறுவனத்தின் முக்கிய நபர்கள் பேசி வைத்ததைப் போல் இவர் மாற்றிவிடுவார். இதன்மூலம் பல பெரிய தொழில் நிறுவன முதலாளிகள் பயனடைந்துள்ளனர். இந்த விவகாரம் ரஞ்சன் கோகோய் தலைமையில் உள்ள குழுவில் இவர் எழுத்தராகச் சேர்ந்த 2015ஆம் ஆண்டில் 10 மாதங்கள் பணி புரிந்தபோது ரஞ்சன் கோகோயிடம் இந்த மோசடி கொண்டு செல்லப்பட்டது. பிறகு அவர் நடவடிக்கை எடுத்தார், இதற்கு முன்பு இருந்த நீதிபதிகளிடமும் புகார் கொடுக்கப்பட்டும் விசாரணை நடைபெறுவதில் மிகவும் தாமதம் ஏற்பட்டது, இதற்கு முன்பு இவர் மீதான குற்றச்சாட்டுகள் குறித்த குறிப்புகளில் இவர் குறித்த முழுமையான விசாரணை அறிக்கையிலும் இவரே தலையிட்டு தன்னை மிகவும் நல்லவர் என்றும், மிகவும் திறமையாக பணியாற்றினார் என்றும் மாற்றியுள்ளார்.

இந்நிலையில், தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய், தன்னைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்தியதாக உச்சநீதி மன்ற முன்னாள் பெண் பணியாளரான அந்தப் பெண் ஊழியர், உச்சநீதிமன்ற நீதிபதிகள் அனைவருக்கும் பிரமாணப் பத்திரம் அனுப்பியிருந்தார். இதையடுத்து, இந்த விவகாரம் தொடர்பாக ஆய்வு செய்ய உச்சநீதிமன்றத்தின் சிறப்பு அமர்வு கூடியது. அப்போது, இந்தப் புகார் குறித்து தலைமை நீதிபதி ரஞ்சன் கோகோய் வருத்தம் தெரிவித்திருந்தார். இதன் பின்னணியில் பெரும் சதி இருப்பதாகவும் அவர் தெரிவித்திருந்தார். இந்நிலையில், “இந்த வழக்கில் தலைமை நீதிபதிக்கு எதிராக வாதிட ரூ.1.5 கோடி வரை தருவதற்கு சிலர் முயன்றனர்” என்று உச்சநீதிமன்ற வழக்குரைஞர் உத்சவ் சிங் பைன்ஸ் சார்பில் பிரமாணப் பத்திரம் ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. இந்த விவகாரம் தொடர்பான விசாரணை உச்சநீதிமன்ற நீதிபதி அருண் மிஸ்ரா தலைமையிலான சிறப்பு அமர்வு முன் நடைபெற்றது. அந்த அமர்வில் தலைமை நீதிபதியுடன் நீதிபதிகள் ஆர்.எஃப். நாரிமன், தீபக் குப்தா ஆகியோரும் இடம் பெற்றிருந்தனர்.

உச்சநீதிமன்றமே தானாக முன் வந்து இந்தப் புகாரை விசாரணைக்கு ஏற்றுக் கொண்டது. முதல் நாள் அமர்வில் குற்றச்சாட்டுக்குள்ளான தலைமை நீதிபதியே அமர்வில் இடம் பெற்றது கடும் விமர்சனத்துக்கு உள்ளான நிலையில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அமர்விலிருந்து விலகிக் கொண்டார். நீதிபதி போப்டே தலைமையில் அமைக்கப்பட்ட அமர்வில் இடம் பெற்றிருந்த நீதிபதி ரமணா, தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய்க்கு மிகவும் நெருக்கமானவர் என்று புகார் தெரிவித்த பெண் எதிர்ப்பு தெரிவித்த நிலையில் நீதிபதி ரமணா அமர்விலிருந்து விலகிக் கொண்டார். இந்து மல்கோத்ரா என்ற பெண் நீதிபதி அமர்வில் இணைக்கப்பட்டார்.

தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் மீதான குற்றச்சாட்டுகளைப் பற்றி இந்த அமர்வு விசாரிக்கும். இதில் நீதித் துறையைக் களங்கப்படுத்தும் சதி அடங்கியிருக்கிறதா என்பது குறித்து விசாரிக்கவும் உச்சநீதிமன்ற வழக்கறிஞர் உத்சவ் சிங் பைன்ஸ் தாக்கல் செய்த மனு குறித்து ஆராயவும் உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி ஏ.கே. பட்நாயக்கை உச்சநீதி மன்றம் நியமித்துள்ளது. முதலில் குற்றச்சாட்டு உண்மையா இல்லையா என்பதை உச்சநீதிமன்ற நீதிபதிகள் அமர்வு உறுதி செய்த பிறகு சதி குறித்து தனது விசாரணையைத் தொடங்கப் போவதாக முன்னாள் நீதிபதி ஏ.கே.பட்னாயக் கூறியிருக்கிறார்.

சபரிமலை அய்யப்பன் கோயிலில் பெண்களை அனுமதிக்கலாம். தேர்தல் அறிவிப்புக்குப் பிறகு மோடி வரலாறு குறித்த திரைப்படத்தை வெளியிட அனுமதிக்க முடியாது. ரபேல் விமானம் வாங்கியதில் முறைகேடு நடந்துள்ளதாகக் தொடரப்பட்ட வழக்கில் ‘இந்து’ ஆங்கில நாளேடு வெளியிட்ட ஆவணங்களை நீதிமன்றம் பரிசீலிக்கும் என்பது போன்ற அரசுக்கு எதிரான பல முக்கிய தீர்ப்புகளை வழங்கியது தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் தலைமையிலான அமர்வு. பேரறிவாளன் உள்ளிட்ட 7 தமிழர் விடுதலையை மாநில அரசுக்கு அரசியல் சட்டம் வழங்கியுள்ள 161ஆவது பிரிவின் கீழ் பரிசீலிக்கலாம் என்ற உத்தரவை வெளியிட்டவரும் தலைமை நீதிபதி தான்.

கடந்த வாரம் அசாமில் பா.ஜ.க. ஆட்சியைக் கடுமையாக எச்சரித்து நீதிபதி ரஞ்சன் கோகாய் ஒரு உத்தரவைப் பிறப்பித்தார். அசாமில் வங்க தேசத்திலிருந்து ஊடுருவியவர்கள் என்று 900 வங்கதேச முஸ்லிம்களை அம்மாநில ஆட்சி கடந்த 5 ஆண்டுகளாக முகாமில் கைதிகளாக அடைத்து வைத்திருப்பது அரசியல் கூட்டத்துக்கு எதிரானது என்று கூறிய தலைமை நீதிபதி மாநில அரசின் இந்த சட்ட விரோத செயலுக்கு நீதிமன்றம் ஒரு போதும் துணை நிற்காது என்று எச்சரித்தார். ஊடுருவிய வெளிநாட்டுக்காரர்களை சொந்த நாட்டுக்கு திரும்பி அனுப்ப வேண்டுமே தவிர, காவலில் வைக்க முடியாது என்று கூறிய தலைமை நீதிபதி,

“ஏற்கனவே ஊடுருவிய வெளிநாட்டுக்காரர்கள் பல இலட்சம் பேர். அசாம் சமூகத்தில் இரண்டறக் கலந்து அசாம் அரசியலிலேயே பங்கெடுக்கும்போது இந்த 900 பேரை மட்டும் ஏன் அடைத்து வைத்திருக்கிறீர்கள்” என்றும் தலைமை நீதிபதி கேட்டுள்ளார்.

இந்தப் பின்னணியில் ஆட்சிக்கு எதிராக துணிவோடு சட்டரீதியான தீர்ப்புகளை வழங்கி வரும் தலைமை நீதிபதியை மிரட்டிப் பணிய வைக்கும் நோக்கத்தோடு இந்த பாலியல் குற்றச்சாட்டு சதி கூறப்படுகிறது உச்சநீதிமன்ற ஊழியர்கள் சங்கமும் இந்தக் குற்றச்சாட்டு ஒரு சதி என்று கண்டனம் தெரிவித்துள்ளது.

## நன்கொடை திரட்டும் இயக்கத்தைத் தொடங்கி விட்டீர்களா?



*கழகத் தோழர்களே!*

*தலைமைக் கழகத்தைத் தக்க வைத்துக் கொள்ளும் கட்டமைப்பு நிதி திரட்டும் களப் பணியை தொடங்கி விட்டீர்களா?*

*அதற்கான துண்டறிக்கை - நன்கொடை ரசீதுகள் - தோழர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கழகப் பொறுப்பாளர்கள், தோழர்களைச் சந்திக்க வருகிறார்கள்.*

*தோழர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக நிர்ணயிக்கப் பட்டுள்ள இந்த ரூ.20,000/- நன்கொடை திரட்டும் இயக்கத்தில் தோழர்கள் ஆர்வம் காட்டி வருவது நமக்கு நல்ல நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் தருகிறது. அறிவித்த சில நாட்களிலே சில தோழர்கள் ரூ.20,000/- நன்கொடையை வழங்கியிருப்பதையும் மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்கிறோம். கடந்த இதழ் தொடர்ச்சி:*

1. ஏ.கே.ஆர். டெக்ஸ்டைல்ஸ் நிறுவனர் லோகு - ரூ. 1,00,000/-
2. ரமேஷ்-ஜீவராணி - ரூ. 20,000/-
3. நெமிலி திலீபன் - ரூ. 20,000/-
4. ஹேமலதா, சென்னை - ரூ. 20,000/-

(பட்டியல் பெருகட்டும்)

## கட்டமைப்பு நிதி : மாவட்டங்கள் தீவிரம்

### விழுப்புரம் கழகம் தீவிரம்

விழுப்புரம் மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக கலந்தாய்வு கூட்டம் 20.04.2019 அன்று காலை 10.30 மணிக்கு நடைபெற்றது மாவட்ட கழகத் தலைவர் பூ.ஆ. இளையரசன் ஒருங்கிணைத்தார், மாவட்டச் செயலாளர் பெரியார் சாக்ரட்டீஸ் வரவேற்புரை நிகழ்த்தினார்.

கூட்டத்திற்கு தலைமைக் குழு உறுப்பினர் ந. அய்யனார் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார். கழகத்தின் அடுத்தகட்ட செல்பாடு மற்றும் தலைமைக் கழக அலுவலகத்திற்கான நிதியை விரைவாக. மே 15 க்குள் வசூலித்து கொடுப்பது எனவும் முடிவு செய்யப்பட்டது. மே மாத இறுதியில் பொதுக்கூட்டம் மற்றும் பயிற்சி வகுப்பு நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது

மாவட்ட துணைத் தலைவர் சிறீதர், ஒன்றிய பொறுப்பாளர்கள் பாபு, கிருஷ்ணராஜ், மூர்த்தி மற்றும் தோழர்கள் கெஜராஜ், சிலம்பரசன், அருண், திருமாவளவன், சிறீநாத், மதியழகன், வசந்த் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### திருச்செங்கோடு கழகம் தீவிரம்

கழகக் கட்டமைப்பு நிதி தொடர்பான, திருச்செங்கோடு நகர திராவிடர் விடுதலைக் கழகக் கலந்துரையாடல் 28.04.2019 மாலை 4 மணியளவில் திருச்செங்கோடு பெரியார் மன்றத்தில் நடைபெற்றது.

கலந்துரையாடலுக்கு நகர செயலாளர் பூபதி தலைமை வகிக்க, மல்லை ஒன்றிய செயலாளர் பெரியண்ணன் முன்னிலை வகித்தார். நகரில் யார் யாரிடம் வசூல் செய்வது, கழக தோழர்களுக்கு கட்டாய நிதி போன்றவை கலந்துரையாடப்பட்டு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு:

- கழகத் தோழர் நபர் ஒருவருக்கு குறைந்தபட்சம் ரூ. 1000 என்றும், அதிகபட்சம் அவரவர் விருப்பத்திற்கும் உட்பட்டது.
- தோழர்கள் நகர கழகம் நிர்ணயித்த தங்களுடைய நிதியையும், மேலும் அவர்கள் வசூல் செய்த தொகையையும் கட்டாயம் மே15-ற்குள் கொடுக்க வேண்டும்.
- இனிவரும் காலங்களில், ஒவ்வொரு மாதத்தின் இறுதி வார ஞாயிற்றுக்கிழமை திருச்செங்கோடு நகர கலந்துரையாடல் கட்டாயம் நடைபெறும்.

கலந்துகொண்ட தோழர்கள் திருச்செங்கோடு நகர செயலாளர் பூபதி, மல்லை ஒன்றிய செயலாளர் பெரியண்ணன், மனோஜ், சோமசுந்தரம்.

# மோடி ஆட்சியின் கீழ் காஷ்மீர்

*மோடி ஆட்சியின் முறைகேடுகள் பற்றிய தொகுப்பு : (கடந்த இதழ் தொடர்ச்சி)*

மோடி 2014ஆம் ஆண்டு, காஷ்மீருக்கு வழங்கும் சிறப்பு அந்தஸ்து தரும் அரசியல் சட்டப் பிரிவு 370 நீக்கப்படும் என்ற தேர்தல் அறிக்கையோடு பிரதமர் பதவியில் அமர்ந்தார். ஆட்சிக்கு வந்த பிறகு மோடியின் முதல் காஷ்மீர் வருகைக்கே காஷ்மீர் மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். ஆனால் பா.ஜ.க., மெஹ்பூபா முஃப்தி கட்சியான பிடிபியுடன் கூட்டணி அமைத்து ஜம்மு-காஷ்மீரில் முதன்முறையாக ஆட்சியில் அமர்ந்தது. அதன் பிறகு காஷ்மீரில் சுதந்திரத்திற்கான போராட்டங்களும் இராணுவ அடக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங்களும் அதிகமானதால் பா.ஜ.க. கூட்டணியிலிருந்து வெளியேற மாநில அரசு கலைக்கப்பட்டு காஷ்மீரில் 2018ஆம் ஆண்டு கவர்னர் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

2015ஆம் ஆண்டு காஷ்மீரில் புர்கான் வானி இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து காஷ்மீர் முழுவதும் இராணுவத்தினரால் அடக்குமுறை நிகழ்த்தப்பட்டது. இதில் பல்லாயிரம் பேர் குழந்தைகள் உட்பட தங்கள் பார்வையை இழந்தார்கள். தங்கள் எதிர்காலத்தை இழந்தார்கள். காஷ்மீரிகள் நாட்டின் இரண்டாம் தர குடிமக்களை விட குறைவான நிலையில் நடத்தப்பட்டனர். இந்த அடக்குமுறைகள் இயல்பாகவே இந்தியாவை அவர்களிடமிருந்து அந்நியமாக்குகிறது. இதனை காஷ்மீரிகள் செய்யவில்லை. இந்திய அரசியல்வாதிகள் இதனை கட்டமைக்கிறார்கள்.

இதனாலேயே முன்னால் இருந்த நிலையை விட அதிகமாக காஷ்மீர்கள் சிலர் பாகிஸ்தானின் பக்கம் தங்கள் கவனத்தைத் திருப்புகிறார்கள். மோடியின் ஆட்சியின் கீழ் காஷ்மீர் மிக மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு முறையும் காஷ்மீர் தனது சுதந்திரத்திற்கான குரலை உயர்த்தும்போது பேச்சு வார்த்தையை நடத்த வேண்டிய இடங்களில் ஆயுதங்களை உபயோகித்து அடக்க நினைக்கிறது அரசு. ஆனால் காஷ்மீரிகளின் ஆஷாதி (சுதந்திர) முழக்கம் குறையாமல் உயர்ந்து கொண்டே வருகிறது.

2014ஆம் ஆண்டு 583ஆக இராணுவத்திற்கு எதிரான போராட்டங்கள், 2015இல் 405, 2016இல் 449, 2017இல் 971, 2018இல் 1432 என அதிகமாகிக் கொண்டேதான் போகின்றதே ஒழிய குறையவில்லை. அடக்குமுறைகள் காஷ்மீரில் பிணங்களை உருவாக்குமே தவிர அமைதியைத் தராது. அதனை மோடி அரசு உணரவில்லை.

**மோடி ஆட்சியின் கீழ் வங்கி பரிமாற்றம்:**

மோடியின் ஜன்தன் யோஜனா திட்டத்தின் மூலம் நாட்டு மக்கள் குறைந்தபட்ச சேமிப்பு இல்லாமல் வங்கி கணக்கு தொடங்கலாம் என கொண்டு வரப்பட்ட நடைமுறையின்கீழ் எப்போதும் இல்லாத அளவுக்கு வங்கி கணக்குகள் அதிகமாகியது. ஆனால் கணக்கு தொடங்கப்பட்டதோடு சரி, அந்த வங்கி கணக்குகளில் எந்த பரிமாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் இந்த வங்கி கணக்குகள் மூலம் வங்கிகளுககு எந்த இலாபமும் இல்லை. அது மட்டுமல்ல, ஜந்தன் யோஜனா திட்டத்தின்கீழ் தொடங்கப்பட்ட வங்கி கணக்கில் பண மோசடி நடைபெறுவதாகவும் குற்றச்சாட்டு எழுந்தது. அதிலும், பண மதிப்பிழப்பு நடவடிக்கையின்போது இந்த வங்கி கணக்குகள் பண மோசடிக்காக உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. யூனியன் வங்கியில் உள்ள ஒரு ஜன்தன் வங்கி கணக்கில் 93.82 கோடி ரூபாய் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. அதேபோல், 20 இலட்சம் வங்கி கணக்குகளுக்கு மேலும் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான தொகை வைப்பு நிதியாக வைக்கப்பட்டிருக்கிறது. இதுவெல்லாம் ஜன்தன் வங்கி கணக்கை உபயோகித்து பண மோசடி நடைபெற்றதற்கான சான்று.

மக்களின் பயன்பாட்டில் வங்கி பரிமாற்றத்தை எளிமைப்படுத்த வேண்டும் என்று எல்லோரும் கூறிக் கொண்டிருந்த நிலையில், பாரத ஸ்டேட் வங்கி போன்ற சில வங்கிகள் குறைந்தபட்ச தொகையாக 1000 முதல் 3000 வரை இருக்க வேண்டும். இல்லையென்றால் மாதந்தோறும் அபராதம் விதிக்கப்படுகிறது. இதேபோல் ஒரு மாதத்திற்கு நான்கு முறைக்கு மேல் பணத்தை எடுக்கும்போதும் அதற்கும் தனி கட்டணம் விதிக்கிறது. இந்த நடைமுறை மக்களின் அன்றாட நடவடிக்கைகளில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

# கிராமத்துப் பெண் கோமதியின் உலக சாதனை

“கோமதி... கோமதி... இந்தப் பெயரை உச்சரிக்காதவர்களே கிடையாது. திருச்சியை திரும்பி பார்க்காதவர்களே இல்லை. ஆனால், இப்படி ஒரு நிகழ்வு நடந்து இருப்பதையே அறியாத அப்பாவியாக இருக்கிறாள் அந்தத் தாய்” திருச்சி-மதுரை தேசிய நெடுஞ்சாலையில் இருந்து 15 கிலோ மீட்டர் தூரத்தில் போதிய பேருந்து வசதிகள்கூட இல்லாத மிகவும் பின்தங்கிய கிராமம் முடிகண்டம். இந்த கிராமத்திற்கு செய்தியாளர்களும் ஊடகவியலாளர்களும் படையெடுத்தனர். கிராமமே ஒன்றுகூடி ஆச்சரியப்பட்டது. என்ன நடந்ததோ? ஏது நடந்ததோ? என முணுமுணுக்கிறார்கள்.




அந்தக் கூட்டத்தில் இருந்தவர்களிடம் கோமதி வீடு எங்கே இருக்கிறது என செய்தியாளர் ஒருவர் கேட்க, மேலும் பதற்றம் தொற்றிக் கொள்கிறது. எதற்காக? என்று ஒருவர் கேட்க, ஆசிய தடகளப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றிருக்கிறார் என்று ஊடக செய்தியாளர்கள் கூறியதைக் கேட்ட கோமதியின் உறவினர்களும் ஊர் மக்களும் இன்ப வெள்ளத்தில் நீந்தினர். தோஹாவில் நடந்த ஆசிய ஓட்டப்பந்தயம் 800 மீட்டர் பிரிவில் கோமதி தங்கப் பதக்கத்தை வாங்கிய செய்தி வெளியானதும், மு.க.ஸ்டாலின், கே.பாலகிருஷ்ணன், வைகோ, டிடிவி தினகரன் உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், முதலமைச்சர் எடப்பாடி என பலரும் பாராட்டி வாழ்த்து தெரிவித்தனர். இந்த நிலையில், அவருடைய வீட்டுக்கு செய்தியாளர்கள் சென்ற போது, அதுகுறித்து எதுவும் அறியாமல் இருந்தனர். கோமதியின் சகோதரிகள், அம்மா வயல் வேலைக்குப் போயிருக்காங்க என்ற தகவலைச் சொன்னதும் அவரை அழைத்து வரச் சென்று விடுகிறார்கள் ராஜாத்தியின் மகள்கள். கூலி வேலை பார்க்கும் ராசாத்தி அம்மாவின் வருகையை எதிர்பார்த்து செய்தியாளர்கள் காத்திருந்தனர்.

கூலி வேலை செய்து கொண்டிருந்த ராசாத்தி வீட்டிற்கு வந்ததும் செய்தியாளர்கள் சூழ்ந்து கொண்டனர். “எங்க மகள் கோமதி சின்ன வயதிலிருந்தே நல்லா விளையாடுவாள். எங்க ஊர் பள்ளிக்கூடத்தில் பள்ளிப் படிப்பை முடிச்சதும், திருச்சி கல்லூரியில் சேர்த்து விட்டோம். அந்த காலேஜூக்கும் பயிற்சிக்கும் போக காலையில 3 மணிக்கே எழுந்து நடந்துபோய், அங்கிருந்து பஸ்ச பிடிச்சு போகவேண்டும். கல்லூரிக்குச் சென்று வீட்டிற்கு திரும்ப வேண்டும்” என்றார்.

“அவர் (கணவர்) உயிரோடு இருந்தவரை சின்ன புள்ளைக்கு ரொம்ப ஆதரவாக இருந்தார். அவ சாதிக்கணும்னு அடிக்கடி சொல்லிட்டே இருப்பார். அவருக்குப் புற்று நோய் இருக்குன்னு தெரிய வந்தப்ப எல்லாருமே கலங்கிப் போய்ட்டோம். வைத்தியம் எல்லாம் பார்த்தோம். ஆனாலும், நோய் முத்தி போனதுனால அவர் எங்களைவிட்டே போய்ட்டார். அதுல சின்ன புள்ள (கோமதி) இடிஞ்சு போயிட்டா. அவளை அதுலேருந்து தேத்திக் கொண்டு வர்றதுக்குள்ள போதும் போதும்னு ஆகிடுச்சு என்றும் கூறினார். எங்க சொந்தக்கார பொண்ணு ஒன்னு ஓடிவந்து அக்காவ டிவியில காட்டுறாங்கனு சொன்னது. ஆனால், எனக்கு டிவி போடத் தெரியாது. அதனால கூலி வேலைக்குப் போயிட்டேன். இப்ப நீங்க வந்து சொல்றப்பதான் எனக்கு கோமதி தங்கம் வாங்கனதே தெரியும். ‘ரொம்ப சந்தோஷமா இருக்கு. இதுக்கு அவளோட முயற்சி மட்டும்தான் காரணம். அதற்கு பலனும் கிடைச்சிருக்கு’’ என்று கண் கலங்கினார் தாய் ராசாத்தி.

கோமதியின் தந்தை மாரிமுத்து விவசாயப் பண்ணையில் கூலி வேலை செய்து வந்தார். தாய் ராசாத்தி விவசாயக் கூலி வேலைக்குச் சென்று வருகிறார். விவசாயக் கூலித் தொழிலில் கிடைக்கும் சொற்ப வருமானத்தைக் கொண்டு தங்களின் நான்கு பிள்ளைகளைக் காப்பாற்றி வந்துள்ளனர். மூத்த மகன் சுப்பிரமணிக்கு ஊர்க்காவல் படையில் வேலை கிடைத்திருக்கிறது. அடுத்து பிறந்த மூன்று பெண் குழந்தைகளில் கடைக்குட்டி தேவதை தான் கோமதி. பெண் குழந்தைகள் படிக்க வேண்டும் என்பதில் மிகக் கவனமாக இருந்திருக்கிறார் மாரிமுத்து. அதைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு படிப்பிலும் விளையாட்டிலும் அதிக ஆர்வம் காட்டியிருக்கிறார். கடந்த சில வருடங்களுக்கு முன்பு மாரிமுத்து உடல்நலக் குறைவால் இறந்துபோக இடிந்து போயிருக்கிறார் கோமதி. அந்த சமயம், ஒரு வேளை சாப்பிட, உணவுகூட இல்லாமல் கஷ்டங்களை அனுபவித்துள்ளனர்.

தந்தைக்குப் பிறகு, தன்னை சிறந்த வீராங்கனையாக உருவாக்க வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக பயிற்சி கொடுத்து வந்த பயிற்சியாளர் காந்தியும் மாரடைப்பில் மரணம் அடைந்தது கோமதியை ரொம்பவும் மனசு உடைய வைத்திருக்கிறது. “கொடும கொடுமன்னு கோவிலுக்கு போனா அங்க இரண்டு கொடும ஜிங்கு ஜிங்குனு ஆடுச்சு’’ என்ற கதையாக கோமதிக்கு காலில் ஏற்பட்ட காயத்தால், விளையாடவே முடியாமல் அவதிப்பட்டார். ஆனாலும், விடாமுயற்சியில் விளையாட்டில் கவனம் செலுத்தி வந்த கோமதி, விளையாட்டில் ஜெயிச்சே ஆகணும்னு வைராக்கியம் கொண்டார். அதில் வெற்றியும் பெற்றுவிட்டார். மகளின் விளையாட்டு ஆர்வத்திற்கு தூணாக நின்று ஊக்கம் கொடுத்த தந்தை மாரிமுத்து, சாதனை படைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டுள்ளார். ஆனால், மகள் சாதித்ததை பார்ப்பதற்கு அவர் உயிரோடு இல்லை என்ற கவலை அவரது குடும்பத்தினரிடம் மேலோங்கியுள்ளது.

ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து, பல்வேறு சவால்களைக் கடந்து சாதித்துள்ள கோமதிக்கு, சல்லிக் காசுகூட வழங்காமல் வெறும் வாழ்த்துக் கடிதத்துடன் முடித்துக் கொண்டது தமிழக அரசு. விளையாட்டு ஆர்வலர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. தடகளத்தில், அதுவும் 800 மீட்டர் ஓட்டம் போன்ற கடினமான பிரிவில் தமிழக வீராங்கனை வெற்றி பெறுவது அத்தி பூத்தார்ப் போன்றது. இந்த கூட்டத்தில் சாதித்த அந்த ஏழை விவசாய கூலித் தொழிலாளி மகளுக்கு திரைப்பட நகைச்சுவை நடிகர் ரோபோ சங்கர் ஒரு இலட்சம் ரூபாய் வழங்கினார். சென்னை ஆலப்பாக்கம் வேலம்மாள் வித்தியாலயா பள்ளியின் சார்பில் நடந்த பாராட்டு விழாவில் அவரை ஊக்கப்படுத்தி மூன்று இலட்சம் ரூபாய் வழங்கி கவுரப்படுத்தினர். திமுக தரப்பில் 10 இலட்சம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும் என்று அக்கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருக்கிறார்.

கோமதிக்கு சின்ன வயசுல தடகளத்தின் மீது ஆர்வம் இல்லை. கல்லூரியில் படிக்கும்போதுதான் ஓடத் தொடங்கியிருக்கிறார். கல்லூரிகளில் நடந்த பல்வேறு தடகளப் போட்டிகளிலும் வெற்றி பெற்று பல்வேறு பதக்கங்களையும், கோப்பைகளையும் வென்ற கோமதி, தேசிய அளவில் பதக்கம் வென்றார். பெங்களூரில் வேலை செய்து வந்தாலும் தான் வாங்கிய பதக்கங்களைக் கூட வைக்க இடமில்லாத வீட்டில் வளர்ந்த பெண் இந்தியாவிற்கு பெருமை தேடித் தந்ததை எண்ணி அவரது கிராம மக்கள் பெருமை கொள்கின்றனர். தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டி கொடுத்த கோமதி, ‘‘எனது இந்த வெற்றிக்கு முக்கிய காரணம் எனது அப்பா மாரிமுத்துதான். இந்தியாவுக்கு பதக்கம் வாங்கியதன் மூலம் எனது கனவு நிறைவேறியுள்ளது’’ என்றார்.

சாலை வசதியோ, மின் வசதியோ இல்லாத தனது கிராமத்துக்கு அடிப்படை வசதிகளை செய்து தரவேண்டும் என்று கேட்கும் கோமதி, அத்தகைய கட்டமைப்பு வசதிகள் வந்தால், தன்னுடைய கிராமத்திலிருந்து மற்றொரு விளையாட்டு வீராங்கனையை தன்னால் உருவாக்க முடியும் என்கிறார், சாதித்துக் காட்டியிருக்கிறார் கிராமத்திலிருந்து வந்த ஒடுக்கப்பட்ட சமுதாயத்துப் பெண்.


**‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வங்கிக் கணக்கு**

*கரூர் வைஸ்யா வங்கி, அடையாறு கிளை,*
*‘கரண்ட்’ அக்கவுண்ட்*
*எண் : 1257115000002041*
IFSC : KVBL0001257
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆9841489896
மேற்கண்ட கணக்கில் கட்டமைப்பு நிதியை செலுத்தலாம்

# புரட்சிக் கவிஞரைப் பெரியாருக்கு எதிராக நிறுத்தும் புரட்டு வாதங்கள்

– கனலி

பதியப்பட்ட வரலாற்று நிகழ்வுகளைத் தங்கள் வாய்ப்புக்கேற்ப மாற்றிப் பேசும் கெடுவாய்ப்பும் தமிழ்நாட்டில் நிகழ்ந்துகொண்டுள்ளது. அதற்கு அண்மைக்கால எடுத்துக்காட்டு புரட்சிக்கவிஞர் பாரதிதாசனை தந்தை பெரியாருக்கு எதிராக நிறுத்தும் தவறானப் போக்காகும்.

பாவேந்தர் பெரியார் மேல் கொண்டிருந்த தாளாப் பற்றைத் தமிழகம் அறியாததல்ல.

“மக்கள் நெஞ்சின் மலிவுப் பதிப்பு
வஞ்சர்க்கோ கொடிய நெருப்பு
மிக்க பண்பின் குடியிருப்பு
விடுதலைப் பெரும் படையின் தொகுப்பு
தமிழர் தவம்கொடுத்த நன்கொடை
தன்மானம் பாயும் தலை மேடை
நமக்குத் தாண்டி அந்த வாட்படை
நமைஅவரின் போருக்கு ஒப்படை”

பெரியார் குறித்துப் பாவேந்தர் தீட்டியுள்ள இந்தப் பாட்டோவியம் எக்காலத்திற்கும் பொருந்துவதாகும்.

1908ஆம் ஆண்டு நடந்த புலவர் தேர்வில் மாநிலத்திலேயே முதல் மாணாக்கராய்த் தேர்ச்சி பெற்றவர் அன்றைய கனக சுப்புரத்தினம். மயிலம் ஸ்ரீஷண்முகன் வண்ணப்பாட்டும், மயிலம் சுப்பிரமணியர் துதியமுதும் பாடிக்கொண்டிருந்த கனக சுப்புரத்தினம், அதே ஆண் டில் புதுவை வேணு நாய்க்கர் வீட்டுத் திருமண நிகழ்வு ஒன்றில் முதன்முதலாய்ப் பாரதியாரைச் சந்திக்கிறார். பின்னர் அவருடன் நெருங்கிப்பழகும் வாய்ப்பு அவருக்கு ஏற்படுகிறது.

“கலகலென மயிலினொடு விளையாடி
வருகோலம்
காண்பனேல் கவலை யுண்டோ?
கன்னலென வயலெலாம் செந்நெல்வளர்
மயிலம்வாழ்
கந்தா குழந்தை வேலா…”

என்று கடவுள் பாடல்களும்,

“கன்னலடா எங்கள் காந்தியடிகள் சொல்
கழறுகிறேன் அதைக் கேளே - நீவீர்
கதர் அணிவீர் உங்கள் பகைவரின் வேரங்குத்
தூளே… தூளே… தூளே…”

என்று கதர் ராட்டினப் பாடல்களும் எழுதி வந்த கனக சுப்புரத்தினம், பாரதியாரின் தொடர்புக்குப்பின் புதிய பாட்டுப் பாதையில் பயணிக்கத் தொடங்குகிறார்.

“பாடலிற் பழமுறை பழநடை என்பதோர்
காடு முழுதும் கண்டபின் கடைசியாய்க்
சுப்பிர மணிய பாரதி தோன்றியென்
பாட்டுக்குப் புதுமுறை புதுநடை காட்டினார்”

என்று பாரதியால் தான்பெற்ற பயன்பற்றிப் பாவேந்தர் எழுதினாலும் பாவேந்தரையே புதுநெறி காட்டிய புலவ ராய்த் தமிழகத்திற்கு அறிமுகப் படுத்தியது தன்மான இயக்கந்தான்.

1928ஆம் ஆண்டுதான் அவருக்கும் பெரியாருக் குமான தொடர்பு அரும்புகிறது. அன்று தொட்டு 1964 வரை, அதாவது 36 ஆண்டுக்காலம் பகுத்தறிவியக்கச் சிம்புட் பறவையாய்ப் பாவேந்தர் சிறகடித்துப் பறந்தார். அவருக் கும் பெரியாருக்கும், அவருக்கும் தன்மான இயக்கத் திற்கும் அறுபட முடியாத ஓர் உறவுப் பாலத்தைக் காலம் தன்போக்கில் கட்டி அமைத்தது. அஃது வரலாற்றில் ஓர் இன்றியமையாத் தேவையாகவும் அமைந்து போயிற்று.

இன்று தமிழ்த்தேசியம் பேசும் சில பேர் ‘திராவிடம்’ என்ற சொல்லைக் கேட்டாலே தீராத பகை கொண்டு நஞ்சு கக்குகின்றனர். அவர்களுக்கு அந்தச் சொல்லின் மேல் அவ்வளவு வெறுப்பு; சினம். 1938 இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது பெரியார் ‘தமிழ்நாடு தமிழர்க்கே’ என்ற முழக்கத்தைத் தான் முன்வைத் தார். பின்னர் அவரின் அரசியல் முழக்கம் ‘திராவிட நாடு திராவிடருக்கே’ என்பதாக மாற்றம் பெற்றது. அதற்கான அரசியற் பின்புலத்தை ஆய்வு செய்தல் இக்கட்டுரையின் நோக்கமன்று.

1956 ஆண்டுக்குப்பின் இங்கே மொழிவழி மாநிலங்கள் அமையலாயின. பெரியாரும் தம் அரசியல் முழக்கத்தைத் ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என மாற்றிக் கொண்டார். தம் வாழ்வின் இறுதிக்காலமான 1973 வரை, இக்கொள்கையிலிருந்து அவர் பின்வாங்கவில்லை.

பெரியாரின் தொடர்பு ஏற்பட்ட காலம் முதல் பாவேந்தர் ‘குடிஅரசு’, ‘பகுத்தறிவு’ போன்ற ஏடுகளில் இடைவிடாமல் எழுதி வந்தார். 1938இல்



ஏப்ரல் 29, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பிறந்த நாள்

குத்தூசி குருசாமி - குஞ்சிதம் குருசாமி இணையரின் முயற்சி யால் ‘பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி’ வெளி வருகிறது. முதல் தொகுதியில் இடம்பெற்றுள்ள பெரும் பாலான படைப்புகள் தமிழின் இனிமை, தமிழ்மொழி யின் மேன்மை, தமிழ் வளர்ச்சி, தமிழர் முன்னேற் றம், மூடத்திருமணம், கைம்மைக் கொடுமை, பெண்ணுக்கு நீதி, தொழிலாளர் விண்ணப்பம், புதிய உலகு செய்வோம் போன்ற பல்வேறு பாடுபொருள்களைக் கொண்டவை.

1949ஆம் ஆண்டு பாரதிதாசன் கவிதைகள் இரண்டாம் தொகுதி வெளிவந்தது. இந்நூலின் முதல் பாடலே, ‘வாழ்க வாழ்கவே - வளமார் எமது திராவிட நாடு வாழ்க வாழ்கவே’ என்னும் ‘திராவிட நாட்டுப் பண்ணோடு’ தான் தொடங்குகிறது.

“செந்தமிழர் உன்நாட்டின் பேரென்ன
செப்பென்றேன்
இந்தியா என்றே இளிக்கின்றான் என்தாயே
பைந்தமிழ் நாட்டினையும் பாரதம் என்று
சொல்வான்
எந்தவகையில் இச்சேய் உருப்படுவான்
என்தாயே!”

என்று எழுதிய பாரதிதாசன்தான்,

“‘இனப்பேர் ஏன்’ என்று பிறன்எனைக் கேட்டால்
மனத்தில் எனக்குச் சொல்லொணா மகிழ்ச்சியாம்
‘நான்தான் திராவிடன்’ என்று நவில்கையில்
தேன்தான் நாவெலாம்! வான்தான் என்புகழ்”

என்று மகிழ்ச்சி மீதூரக் கூவுவார்.

“சீர்த்தியால், அறத்தால், செழுமையால், வையப்
போர்த்தி றத்தால் இயற்கை புனைந்த
ஒருயிர் நான், என் உயிர்இனம் திராவிடம்
ஆரியன் அல்லேன் என்னும் போதில்
எத்தனை மகிழ்ச்சி எத்தனை மகிழ்ச்சி
விரிந்த வரலாற்றுப் பெருமரம் கொண்ட
‘திராவிடன்’ ஆலின் சிறிய வித்தே”

- பாரதிதாசன் கவிதைகள், தொகுதி-2

என்பார் பாவேந்தர்.

‘திராவிடம்’ என்பதே ஒரு திருட்டுச் சொல், குழப்பச் சிந்தனை என்று குழப்புகிறார்கள் இன்றைய நவீனத் தமிழ்த்தேசியர்கள். இதில் எவ்வகைக் குழப்பமும் இல்லை. ‘ஆரியம்’ என்கிற நச்சுப் பார்ப்பனியக் கருத்தியலுக்கு எதிராக முன்நிறுத்தப்பட்ட கலகச் சொல்தான் திராவிடம். ஆரிய எதிர்ப்பு, வடமொழி எதிர்ப்பு, பார்ப்பன எதிர்ப்பு, வருணாசிரம சாதி எதிர்ப்பு, பெண்ணடிமை எதிர்ப்பு போன்றவற்றின் குறியீட்டுச் சொல்தான் திராவிடம்.

மேலும் திராவிடம் தமிழியத்திற்கு எதிரானதும் அல்ல. மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள் தமிழம் என்னும் பெயரே திரவிடம் எனத் திரிந் தது என்றும், தமிழே பிற திரவிட மொழிகளாகத் திரிந் தது என்றும் சுட்டுவார்.

“தமிழுக்குத் திரவிடம் என்னும் பெயர் தமிழ்நாட்டில் வழங்காமையானும், தமிழ் என்னும் வடிவத்தையொட்டிய பெயர்களே மேனாட்டிலும் வடநாட்டிலும் பழங்காலத்தில் வழங்கி வந்தமையாலும், திராவிட மொழிகளெல்லாம் ஒரு காலத்தில் தமிழாகவே இருந்த மையானும், தமிழம் என்னும் பெயரே திரவிடம் எனத் திரிந்தது என்று தெளியப்படும். தமிழ் என்னும் பெயர் எங்ஙனம் திரவிடம் எனத் திரிந்ததோ, அங்ங னமே தமிழாகிய மொழியும் திரவிட மொழிகளாய்த் திரிந்ததென்க.” - பாவாணர் : திரவிடத்தாய், பக்.8, தமிழ்மண் வெளியீடு.

எனவேதான், அரசியல் வழி திராவிட நாட்டுக் கொள்கையை முன்நிறுத்திய பெரியாரைப் பின்பற்றிப் பாவேந்தர், திராவிட நாட்டைப் பாடினார்; திராவிட நாட்டுக் கொடிக்கு வணக்கம் செய்தார்.

“வானில் உயர்ந்த திராவிட நாட்டு
மணிக்கொடி தன்னை வணங்குவோம்
ஊனுடைமை உயிர் யாவும் திராவிடர்
மானத்தைக் காப்பதற் கல்லவோ?
ஆனதைப் பார்க்கட்டும் ஆளவந்தார் - அவர்
ஆர்ப்பாட்டங்கள் நமை வெல்லுமோ?
திண்மையும் உண்மையும் வண்மையும் கொண்ட
திராவிடர் மாக்கொடி வாழ்கவே
ஒண்சுடர் வான்நிலை உள்ளளவும் புகழ்
ஓங்கித் திராவிடம் வாழ்கவே”

- குயில் 1-10-1947

மேலும் பாவாணர் கருத்தை ஏற்றுக் கொண்டவராய் திராவிடரும் திருத்தமிழும் ஒன்றுதான் என்று பாவேந் தர் கருத்துரைக்கிறார்.

“திராவிடம் என்று செப்பியதேன் எனில்
திருத்தமிழம் எனும் செந்தமிழ்ப் பெயரை
வடவர் திரமிளம் என்று வழங்கினர்
திரமிளம் பிறகு திராவிடம் ஆனது
வேட்டியை வடவர் வேஷ்டி எனினும்,அவ்
வேட்டி திரிந்த வேஷ்டியும் தமிழே
அதுபோல்,
திருத்தமிழகத்தைத் திராவிடம் என்றால்
இரண்டும் தமிழே என்பதில் அய்யமேன்?”

- குயில் 1.7.1947

பல்வேறு அரசியல் மாற்றங்களுக்குப்பின் இந்தியத் துணைக்கண்டமெங்கும் மொழிவழி மாநிலங்கள் அமையத் தொடங்கின. அதுவரை திராவிட நாட்டுக் கோரிக்கையை முன்வைத்துப் போராடி வந்த பெரியார், ஆந்திரப் பிரிவினையை அடுத்து மலையாளிகளும், கன்னடியர்களும்கூட நம்பிக்கையற்றவர்களாய் இருப்பதைக் கண்டார்.

“தமிழ் எழுதப் படிக்கப் பேசத்தெரியாத மலையாளிகளையும் கன்னடியர் (மங்களூர்க்காரர்) களையும் தமிழ்நாட்டிலே மாகாணத் தலைமை உத்தியோகம், ஜில்லாத் தலைமை உத்தியோகம் மற்றும் கெசட் பதிவு அதிகாரிகள், கெசட் பதிவில்லா அதிகாரிகள், கமிஷனர்கள் முதலிய உத்தியோகங்களில் நியமிப்பது என்பது சர்வ சாதாரணமான காரியமாக இருந்து வருகிறது… தமிழ் தெரியாத அதிகாரிகளைக் கொண்டுவந்து வைத்து, அவர்களிடம் நீதி நிர்வாக அதிகாரங்களைக் கொடுத்து நிர்வாகம் செய்யச் சொல்வது என்றால், எந்தவிதத்தில் இந்த நாட்டில், இந்த நாட்டு மொழியை அரசாங்கம் ஆதரிக்கிறது என்று சொல்ல முடியும்? உயர்திரு காமராசர் அவர்களைக் கொண்ட, சென்னை இராஜ்ய மந்திரி சபை, இனியாவது இந்த விஷயத்தில் கவலை கொள்வது பெருமைக்குரியதாகும்” (பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள், வே. ஆனைமுத்து தொகுப்பு நூல், பக்.835-836).

பெரியார் தம் 76ஆவது பிறந்தநாளையொட்டி, 1954ஆம் ஆண்டு வெளியிட்ட ஒரு அறிக்கையிலும் வடநாட்டார் மற்றும் மலையாளிகள் ஆதிக்கத்தைக் குறித்து ஒரு நீண்ட பட்டியல் மூலம் விளக்கினார். ஒரு கட்டத்தில் மலையாளிகள் எதிர்ப்பு மாநாடு ஒன்று நடத்துவது பற்றியும் அவர் திட்டமிட்டார். திராவிட நாடு பிரிவினைக் கொள்கையைக் கைவிட்ட பெரியார் தம் வாழ்வின் இறுதிமூச்சு வரை தனித்தமிழ் நாட்டுக் கொள்கையைத்தான் முன்வைத்தார். 19.12.1973 அன்று தியாகராய நகர் இறுதிப் பேருரையில் அவர் பின்காணுமாறு வீரமுழக்கமிட்டார் :

“நீ போப்பா வெளியே, உனக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? நீ 2000 மைல், 1500 மைல் தூரத்தில் இருக்கிறாய். உன் பேச்சு எனக்குப் புரியாது. என் பேச்சு உனக்குப் புரியாது. உன் பழக்கம் வேற. என் பழக்கம் வேற. மரியாதையாய்ப் போ. ரகளை வேணாம். என்னத்துக்காக இவ்வளவு தூரத்தில இருக்கிறவன் எங்களுக்கு இராஜாவாகணும்? நீ இல்லாவிட்டால் எங்களுக்கு என்ன நஷ்டம்?

4ஆம் பக்கம்

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# தேர்தல் முடிந்தவுடனே ஹைட்ரோ கார்பன் திட்டத்துக்கு அனுமதி

கடந்த மார்ச் 2016ல் மத்திய அரசால் புதிய எண்ணெய் எடுப்புக் கொள்கை HELP (Hydrocarbon Exploration Licensing Policy) அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் மூலம் ஒற்றை அனுமதி என்கிற பெயரில் கச்சா எண்ணெய் அனுமதியுடன் மீத்தேன், ஷேல் (பாறையிடுக்கு எரிவாயு), டைட் கேஸ் உள்ளிட்ட எந்த வகையான எண்ணெய் மற்றும் எரிபொருட்களையும் எடுப்பதற்கு வழிவகை செய்யப்பட்டது. எண்ணெய் நிறுவனங்களே எண்ணெய் வட்டாரங் களைத் தேர்வு செய்யவும், இலாபத்தில் பங்கு என்கிற நடைமுறையை மாற்றி, வருமானத்தில் பங்கு என்கிற புதிய நடை முறையையும் கொண்டதாக இந்த ஒற்றை அனுமதி மாற்றி யமைக்கப்பட்டது. மேலும், கடந்த 01.08.2018 அன்று நடந்த மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் கடந்த 2016க்கும் முந்தைய கச்சா எண்ணெய் எடுக்கக் கூடிய இடங்களுக்கும் இந்த ஒற்றை அனுமதி முறை மூலம் விரிவுபடுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது

தமிழகத்தைப் பொறுத்தவரை நில வளத்தையும், நீர்வளத்தையும் பாதிக்கக் கூடிய மரபுசாராத் திட்டங்களாகிய மீத்தேன் உள்ளிட்ட திட்டங்களுக்கு கடந்த 2013ல் இடைக்கால தடையும், 2015ல் நிரந்தர தடையும் அமலில் இருக்கக்கூடிய சூழலில், திறந்த வெளி அனுமதி முறையில் முதல் சுற்றில் தரைப்பகுதியில் கடலூர் மாவட்டம் தியாகவள்ளியிலிருந்து நாகை மாவட்டம் வைத்தீஸ்வரன் கோவில் வரையுள்ள நிலப்பரப்பில் 731 சதுர கி.மீ. ஓ.என்.ஜி.சி நிறுவனத்திற்கும் மற்றும் மரக்காணம் முதல் குள்ளஞ்சாவடி வரை 1,794 சதுர கி.மீ., பரங்கிப்பேட்டை முதல் நாகை மாவட்டம் புஷ்பவனம் வரை 2,674 சதுர கி.மீ., பகுதியை வேதாந்தா நிறுவனத் திற்கும் ஹைட்ரோ கார்பன் எடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த சூழலில் மேற்கண்ட நிறுவனங்கள் சுற்றுச்சூழல் அனுமதிக்கு கடந்த மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் விண்ணப்பித்துள்ளன.

> நாடாளுமன்ற தேர்தல் பிரச்சாரத்தின் போது ஹைட்ரோ கார்பன் திட்டத்தை ரத்து செய்வோம், அனுமதிக்க மாட்டோம் என முதல்வர் எடப்பாடி பழனிசாமியும், துணை முதல்வர் பன்னீர்செல்வமும் வாக்குறுதி யளித்தனர்.
> ஆனால் தேர்தல் முடிந்த அடுத்த சில நாட்களிலே போலீஸ் பாதுகாப்புடன் இத்திட்டத்திற்கு அனுமதியளித்துள்ளது.

மேலும், திருவாரூர், நாகை மாவட்டங்களை உள்ளடக்கிய பெரியகுடி மற்றும் கடலூர் மாவட்டம் புவனகிரி எண்ணெய் வட்டாரங்களில் டைட் கேஸ் எனப்படும் மரபுசாரா எண்ணெய் எடுப்பு முறைக்கு கடந்த 27.02.2019ல் சுற்றுச் சூழல் அனுமதிக்காக ஓ.என்.ஜி.சி. நிறுவனம் விண்ணப்பித்துள்ளது.டெல்டா பகுதிகளில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தும் ஹைட்ரோ ப்ராக்தரிங் முறையில் மேற்கண்ட வாயு எடுக்கும் நடைமுறைக்கு அமெரிக்காவின் ப்ளேட் எனர்ஜி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட ஓ.என்.ஜி.சி. நிறுவனத்தின் இரு திட்டங்களுக்கான விண்ணப்பத்தை ஏற்றுக்கொண்ட மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம், மக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்த அறிவுறுத்தியும், சுற்றுச்சூழல் தாக்க அறிக்கை, சுற்றுச் சூழல் மேலாண்மை அறிக்கை தயாரிப்பு உள்ளிட்ட 40க்கும் மேற்பட்ட நிபந்தனை களை விதித்து கடிதம் அனுப்பியுள்ளது.

மாநில சுற்றுச் சூழல் அமைச்சர்கடந்த அக்டோபர் 2018ல் மத்திய அரசிடம் கொடுத்த மனுவில் வளர்ச்சித் திட்டங் களுக்கு பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்டத்திலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென கோரிக்கை விடுத்திருந் தார். வேதாந்தா நிறுவனமும் தன்னுடைய சுற்றுச்சூழல் அனுமதி கடிதத்தில் கடற் பகுதியில் மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்த வேண்டியதில்லை என்ற விதி முறையைக் காட்டி தனக்கு கருத்துக்கேட்புக் கூட்டத்திலிருந்து விலக்கு கேட்டுள்ளது. ஆனால் மரக்காணம் முதல் பரங்கிப் பேட்டை வரையிலான ஆழமில்லா கடல்பகுதி மட்டுமின்றி, தரைப்பகுதியில் ஒதுக்கீடு பெற்றுள்ள நிலையிலும் வேதாந்தா நிறுவனம் கருத்துக் கேட்பு கூட்டத்திலிருந்து விலக்கு கேட்பது மக்கள் விரோத செயலாகும். இந்நிலையில் நாடாளுமன்ற தேர்தல் பிரச்சாரத்தின் போது ஹைட்ரோ கார்பன் திட்டத்தை ரத்து செய்வோம், அனுமதிக்க மாட்டோம் என முதல்வர் எடப்பாடி பழனிசாமியும், துணை முதல்வர் பன்னீர்செல்வமும் வாக்குறுதி யளித்தனர். ஆனால் தேர்தல் முடிந்த அடுத்த சில நாட்களே போலீஸ் பாது காப்புடன் இத்திட்டத்திற்கு அனுமதியளித் துள்ளது தமிழக மக்களுக்கும், விவசாயிகளுக்கும் செய்துள்ள மிகப் பெரிய துரோகம்.

மத்திய பாஜக அரசு தமிழகத்தை வேதாந்தா உள்ளிட்ட தனியார் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு அடகு வைக்கத் துடிப்பதுடன், தமிழகத்தின் வளங்களையும், விவசாயிகள், பொதுமக்களின் வாழ்வா தாரங்களையும் அழித்தொழிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றது. இதை தட்டிக்கேட்க வேண்டிய, மாநிலத்தில் ஆளும் எடப்பாடி அரசோ, தமிழக மக்கள் நலன்களைப் பற்றி கிஞ்சிற்றும் கவலைப் படாமல் தன் பதவியைமட்டும் காப்பாற்றிக் கொண்டு கூட்டுக் கொள்ளையடித்தால் போதும் என்ற நிலையில் செயல்பட்டு வருவது வன்மையான கண்டனத்திற் குரியது. எனவே, டெல்டா பகுதிகளில் ஹைட்ரோகார்பன் எடுப்பதற்கு ஓ.என்.ஜி.சி. நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள அனுமதியை உடனடியாக ரத்து செய்ய வேண்டும். காவிரிப் பாசனப் பகுதிகளை பாதுகாக்கப் பட்ட வேளாண் மண்டலமாக அறிவிக்க வேண்டும் என்பதே தமிழக மக்களின் ஒருமித்த கோரிக்கை.

---

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

எங்களுக்கு என்ன உப்பு இல்லையா? தண்ணீர் இல்லையா? மலை இல்லையா? காடு இல்லையா? சமுத்திரம் இல்லையா? இல்லை, நெல் விளைய வில்லையா? கரும்பு விளையவில் லையா? என்ன இல்லை எங்களுக்கு!"

94 அகவை நெருங்கிய நிலையிலும் சிறைக்கஞ்சாத சிங்கமாய்ப் போராடிய தொண்டுக்கிழத்தின் துணிவுதான் எத்தகையது? இந்தப் பெரியாரைப் பார்த்துக் கன்னடர் என்றும், தமிழர்களைக் காட்டிக் கொடுத்த தலைவர் என்றும் சிலர் தொண்டைகிழியக் கத்தி தொடை தட்டுகிறார்கள்.

பெரியார் பாசறையின் பாட்டு முரசம் பாரதிதாசன். அவரின் இடிமுழக்கப் பேச்சுகளையும் எழுத்துகளையும் அப்படியே வெடிமருந்துப் பாக்களாய் வெளிப்படுத்தியவர் பாவேந்தர். இன்று சில பேர் பாவேந்தரைப் பெரியா ருக்கு எதிரி போல எதிர்ப்பக்கத்தில் நிறுத்தி இன்பங் காணுகிறார்கள். பெரியாரின் திராவிடச் சார்பையும் மீறிப் புரட்சிப் பாவலர் தமிழ்த்தேசியப் பாவலராய்ப் புதுப் பிறப்பெடுத்தாராம்.

பெரியாரைத் தம் வாழ்வின் தனிப்பெருந் தலைவராய் ஏற்றுங் கொண்டவர் பாவேந்தர்.

பயிர்போன்றார் உழவர்க்குப்! பால் போன்றார்
குழந்தைகட்குப் பசும் பாற்கட்டித்
தயிர் போன்றார் பசித்தவர்க்குத்! தாய் போன்றார்
ஏழையர்க்குத்! தகுந்த வாக்குச்
செயிர் தீர்ந்த தவம் போன்றார், செந்தமிழ் நாட்டிற்
பிறந்த மக்கட் கெல்லாம்
உயிர்போன்றார்! இங்கு வந்தார், யாம்கண்ட
மகிழ்ச்சிக்கோர் உவமை உண்டோ?

என்று பொதுவாழ்வில் பெரியார் வரவை எண்ணி மகிழ்ச்சிக் கூத்தாடியவர் பாவேந்தர். 1956-க்குப் பின், திராவிட நாட்டுக் கொள்கையைக் கைவிட்டு, தனித் தமிழ் நாட்டுக் கொள்கையைப் பெரியார் உயர்த்திப் பிடித்த போது, அவரின் படையணியின் முதல்வரிசை வீரனாய் நின்றவர் பாவேந்தர். 1956ஆம் ஆண்டுக் குப் பிறகு அவர் எழுதிய பெரும்பான்மையான பாடல் கள் தமிழ்நாட்டு விடுதலையை முன்னிறுத்திய வையே ஆகும்.

"கேரளம் என்று பிரிப்பதுவும் - நாம்
கேடுற ஆந்திரம் பிய்ப்பதுவும்
சேரும் திராவிடர் சேரா தழித்திடச்
செய்திடும் சூழ்ச்சி அண்ணே - அதைக்
கொய்திட வேண்டும் அண்ணே!"

திராவிட நாட்டுக்கு ஆதரவாக எழுதப்பட்ட இப் பாடல் 1949ஆம் ஆண்டு வெளிவந்த பாரதிதாசன் கவிதைகள் இரண்டாம் தொகுப்பில் இடம்பெற்ற படைப்பாகும்.

"தமிழர்க்குத் தமிழே தாய்மொழி என்றோம்
தமிழகம் தமிழர்க்குத் தாயகம் என்றோம்
தமிழ்நாட்டில் அயலார்க் இனி என்ன வேலை
தாவும் புலிக்கொரு நாய் எந்த மூலை
அவனவன் நாட்டில் அவனவன் வாழ்க - மற்
றயல் நாட்டைச் சுரண்டுதல் அடியோடு வீழ்க
துவளாத வாழ்க்கை உலகமெலாம் சூழ்க!
தூக்கிய கைகள் அறம் நோக்கித் தாழ்க!"

இப்பாடல் 4.11.1958 அன்று குயில் ஏட்டில் இடம்பெற்றது.

திராவிடம் பற்றிய கருத்தோட்டத்திலும், தனித்தமிழ் நாட்டுக் கொள்கை நிலைப்பாட்டிலும் பாவேந்தர் எப்போதும் பெரியாருடன் இணைந்தேதான் பயணித்தார். தமிழ்மொழி, தமிழ் இலக்கியம் பற்றிய செய்தி களில் இருவர்க்குமிடையே சிற்சில கருத்து வேற்று மைகள் இருந்ததுண்டு. ஆயினும் அவை பகை முரண்களல்ல. எனவே பாவேந்தரைப் பெரியாருக்கு முரண்பட்டவராய்க் காட்டுவது சிலரின் தனிப்பட்ட ஆசையாக இருக்கலாம்.

இன்னும் வெளிப்படையாய்ச் சொல்வதானால் பெரியார் திராவிட நாடு கேட்பதும், தனித்தமிழ் நாடு முழக்கம் எழுப்பியதும் சாதியொழிந்த தமிழகத்தை அவாவியதால்தான். இதன் எல்லை பற்றியெல்லாம் அவர் கவலைப்பட்டுக் கொண்டிருக்க வில்லை.

**நன்றி : 'கீற்று' இணையதளம்**

---

## கட்டமைப்பு நிதி : திருப்பூர் தொழிலதிபர் ஒரு இலட்சம் நன்கொடை



திருப்பூர் தொழிலதிபரும் ஏ.கே.ஆர். டெக்ஸ்டைல்ஸ் நிறுவனருமாகிய லோகு, கழக கட்டமைப்பு நிதியாக ரூபாய் ஒரு லட்சம் கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடம் வழங்கினார். இந்தச் சிறப்பான சந்திப்பிற்கு ஏற்பாடு செய்த சேலம் சங்கீதா மெடிக்கல் பாலசுப்பிரமணிக்கு திராவிடர் விடுதலை கழகத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

## மேட்டூர் நாத்திகர் விழா தள்ளி வைப்பு

சேலம் மேட்டூரில் ஏப்ரல் 27ஆம் தேதி மூட நம்பிக்கைகளுக்கு எதிராக நாத்திகர் விழா என்ற பெயரில் பேரணி மற்றும் பொதுக்கூட்டம் நடத்த அனுமதி கோரி கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் சக்திவேல் மனு அளித்திருந்தார். தேர்தலைக் காரணம் காட்டி, மாவட்ட ஆட்சியரை அணுகக் கூறி, காவல்துறையினர் மனுவைத் திரும்ப அளித்தனர். தங்கள் மனுவைத் திரும்ப அளித்ததன் மூலம் நிகழ்ச்சியைத் தாமதப்படுத்த முயற்சிப்பதாகக் கூறி, விழாவுக்கு அனுமதி அளிக்க மாவட்ட ஆட்சியருக்கும், கருமலைக்கூடல் காவல் நிலையத்தினருக்கும் உத்தரவிடக் கோரி சக்திவேல் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார். இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் மணிக்குமார் மற்றும் சுப்பிரமணியம் பிரசாத் அடங்கிய அமர்வு, மனுதாரரின் கோரிக்கையை இரண்டு நாட்களில் பரிசீலிக்க மாவட்ட ஆட்சியருக்கு உத்தரவிட்டனர். நாட்கள் கடந்தபின்னும் இன்னும் மாவட்ட ஆட்சியர் அனுமதி அளிக்காமல் தாமதம் செய்வதால் நிகழ்ச்சியை ஒத்தி வைப்பதாக சக்திவேல் அறிவித்துள்ளார்.

விரைவில் நீதிமன்ற அனுமதி பெற்று மூடநம்பிக்கைக்கு எதிரான நாத்திகர் விழா நடைபெறும்

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 2nd May 2019

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN